பக்கங்கள்:-19

# காலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவர் ஆண்டு 2056 | மாசி 30 | வெள்ளிக்கிழமை | 14.03.2025 | அதிர்வு 221

## அநுர வெறும் வாய்ச்சொல் வீரர் மட்டுமே!



### எதிரணி குற்றச்சாட்டு

"ஊழல், மோசடியாளர்கள் மாத்திரமின்றி குற்றச்செயல்களுடன் தொடர்புடைய சந்தேகநபர்களைக் 06




# மாகாண சபை முறைமையில் அநுர அரசுக்கு அக்கறை இல்லை

## தமிழரசுக் கட்சி ஆதாரத்துடன் சுட்டிக்காட்டு

(எஸ்.நிதர்ஷன்)

"அநுர அரசு மாகாண சபை முறைமையில் அக்கறை கொள்வதில்லை. ஏனெனில் தாம் நியமித்த ஆளுநர்களையே மாவட்ட அபிவிருத்திக் குழுவில் இணைத்தலைவர்களாக நியமிக்காததிலிருந்து இந்த அரசு மாகாண சபை முறைமையை எந்தளவுக்கு விரும்புகின்றது என்பது தெளிவாகத் தெரிகின்றது."

- இவ்வாறு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பதில் தலைவரும் வடக்கு மாகாண அவைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார். 06

## பெண் வைத்தியர் மீதான வன்கொடுமை: பிரதான சந்தேகநபர் தடுப்புக் காவலில்!

### மேலும் இருவர் கைதாகி விளக்கமறியலில்



அனுராதபுரம் போதனா வைத்தியசாலையின் வைத்தியர் விடுதியில் கடந்த திங்கட்கிழமை மாலை பெண் வைத்தியர் ஒருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட பிரதான சந்தேகநபரான முன்னாள் இராணுவச் சிப்பாயை 48 மணிநேரம் தடுப்புக் காவலில் வைத்து விசாரணை செய்யுமாறு அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. 05

## பூஸா சிறையின் முன்னாள் அதிகாரி சுட்டுப் படுகொலை!



காலி, பூஸா அதியுயர் பாதுகாப்பு சிறைச்சாலையின் முன்னாள் உதவி அத்தியட்சகர் ஒருவர் 06




கடந்த அரசில் சபாநாயகராக இருந்த மஹிந்த யாப்பா அபேவர்தன, பிரதி சபாநாயகராக இருந்த அஜித் ராஜபக்க்ஷ, குழுக்களின் பிரதித் தலைவராக இருந்த அங்கஜன் இராமநாதன் ஆகியோர் தமது பதவிக்காலத்தில் கணக்கு வழக்கு இல்லாமல் எரிபொருள் செலவின கொடுப்பனவை பெற்றுக் கொண்டிருக்கிறார்கள் என்றும், அவர்கள் தொடர்பில் உரிய நடவடிக்கை எடுக்க முடியுமா என்பதை சபாநாயகர் ஜகத் விக்ரமரட்ண கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் இந்த அரசின் சபை முதல்வரான போக்குவரத்து அமைச்சர் பிமல் ரட்நாயக்கா கூறியிருக்கிறார்.

மேற்படி மூவரும் 2022 ஆம் ஆண்டு, 2023 ஆம் ஆண்டு மற்றும் 2024ஆம் ஆண்டின் முதல் 9 மாத காலத்திலும் பயன்படுத்திய எரிபொருள் செலவின விவரத்தை அமைச்சர் பிமல் ரட்நாயக்கா மீண்டும் சபையில் முன் வைத்திருக்கிறார்.

2023 இல் முன்னாள் சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன எட்டு வாகனங்களைப் 06




# கோப்பாய் துயிலும் இல்லத்திற்கு அருகில் உள்ள 2 கிலோ மீற்றர் வீதியும் படையின் கவனிப்பின் கீழ்!

## வீதியில் கூட இனி மாவீரர் நாள் அனுஷ்டிப்பு நெருக்கடிக்குள்ளாகலாம்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம் இராஜ பாதை வீதியில் இருபாலைச் சந்தி முதல் கோப்பாய் சந்தி வரையான இரண்டு கிலோ மீற்றர் தூரம் அப்பகுதியில் நிலை கொண்டுள்ள 51 ஆவது படையணியின் "சிவில் மிலிட்டரி கோபரேசனின்" கவனிப்பின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளது. அப்பகுதியில் காட்சிப்படுத் தப்பட்டுள்ள அறிவித்தல்கள் அத்தகைய வலயம் ஒன்று உருவாகியிருப்பதான கருத்தைத் தந்துள்ளன.

இராணுவத்தின் 51 படையணி நிலைகொண்டுள்ள கோப் பாய் மாவீரர் துயிலும் இல்லம் அமைந்துள்ள இராஜ பாதை வீதியிலேயே இரண்டு கிலோ மீற்றர் தூரத்திற்கு இராணு வத்தினரால் இவ்வாறு அறிவித்தல்கள் எழுதப்பட்டுள்ளன.

இலங்கை அரசு முன்னெடுக்கும் "கிளீன் ஸ்ரீலங்கா" என்னும் திட்டத்தைப் பயன்படுத்தி இப் பிரதேசத்தை துப் பரவுப் பணி செய்யும் பொறுப்பை 51 ஆவது படையணி எடுத்துள்ளது.

இரு திசைகளிலும் உள்ள நாற் சந்திகளில் இவ்விடயங்கள் எழுதப்பட்டுள்ளமையோடு வீதியில் உள்ள அனைத்து மின் கம்பங்களிலும் அது பொறிக்கப்பட்டும் உள்ளது.

கோப்பாய் மாவீரர் துயிலும் இல்லம் இருந்த பிரதே சத்தை ஆக்கிரமித்து 51 ஆவது படையணி நிலை கொண்டி ருப்பதால் அதற்கு அருகில் உள்ள இராஜபாதை வீதியை ஒட்டியே தமிழ் மக்கள் மாவீரர் தின அனுஷ்டானங்களை முன்னெடுத்து வந்தனர்.

இப்போது அந்தப் பகுதியின் பரிபாலனத்தை "கிளீன் ஸ்ரீலங்கா" திட்டத்தின் கீழ் இராணுவம் கையகப்படுத்துவதால் மாவீரர் தின நிகழ்வை இனி வரும் நாள்களில் 51 ஆவது படையணியின் சிவில் மிலிட்டரி கோபரேசனின் கீழ் உள்ள பிரதேசத்திற்குள்ளேயே கடைப்பிடிக்கும் சூழல் ஏற்பட்டுள்ள தாகக் கவலை தெரிவிக்கப்படுகின்றது.






# கம்பஹாவில் துப்பாக்கிச்சூடு! இளைஞர் ஒருவர் படுகாயம்!!

கம்பஹா, வெலிவேரியவில் உள்ள அரலியகஹா சந்திப் பகுதியில் துப்பாக்கிச்சூடு சம்பவம் ஒன்று இடம்பெற்றுள் ளது.

இந்தச் சம்பவத்தில் படுகாயமடைந்த நபர் கம்பஹா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

குறித்த துப்பாக்கிச்சூடு நேற்று வியாழக்கிழமை இரவு 9 மணியளவில் நடந்துள்ளது என்று பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

உடுகம்பொல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளை ஞரே சம்பவத்தில் படுகாயமடைந்துள்ளார்.

துப்பாக்கிச்சூட்டுக்கான காரணமோ அல்லது சந்தேக நபர்கள் குறித்தோ இதுவரை தகவல்கள் வெளியாகவில்லை.

மேலும், சந்தேகநபர்களைக் கைது செய்ய வெலி



வேரிய பொலிஸார் உட்பட மூன்று விசாரணைக் குழுக்கள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றன.

# குருநாகலில் தேங்காய் திருடச் சென்ற இளைஞர் ஒருவர் மீது துப்பாக்கிச்சூடு

## படுகாயங்களுடன் வைத்தியசாலையில்



குருநாகல் – வீரம்புகெதர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட உஹுமீய பகுதியில் வீடொன்றுக்கு அருகில் துப்பாக்கிச்சூட்டுக்கு இலக்காகி இளைஞர் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இடம் பெற்றுள்ளது.

குருநாகல், வாரியபொல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞரே காயமடைந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

இந்த இளைஞர் உ/ஹமீய பிரதேசத்தில் உள்ள தென்னந் தோப்பு ஒன்றுக்குள் சென்று தேங்காய் திருட முயன்றுள்ளார்.

இதன்போது தென்னந்தோப்பின் உரிமையாளர் இளைஞர் மீது துப்பாக்கிச்சூடு நடத்தியுள்ளார்.

துப்பாக்கிச்சூட்டில் படுகாயமடைந்த இளைஞர் குருநாகல் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேகநபரான தென்னந்தோப்பின் உரிமையாளர் 12 ரக போர் துப்பாக்கியுடன் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர் வாரியபொல பகுதியைச் சேர்ந்த 26 வயதுடைய இளைஞர் ஆவார்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை வீரம்பு கெதர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# செப்புக் கம்பியைத் திருட முற்பட்டவர் மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில்



திருகோணமலை துறைமுகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் மின்பிறப்பாக்கியின் செப்புக் கம்பியைத் திருட முற்பட்ட நபர் ஒருவர் மின்சாரம் தாக்கி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.

திருகோணமலை நெல்சன் திரையரங்குக்கு முன்னால் உள்ள மக்கெய்சர் விளையாட்டரங்கின் மூலையில் உள்ள மின் பிறப்பாக்கியில் புவித்தொடுப்பு வயரில் இருந்த செப்புக் கம்பியை வெட்டித் திருட முயற்சித்தபோதே இவருக்கு மின்சாரம் தாக்கியுள்ளது.

பின்னர் அந்த நபர் திருகோணமலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மேலும், அண்மைக்காலமாக பின் பிறப்பாக்கியில் உள்ள செப்புக்கம்பி வயர்கள் வெட்டப்பட்டு வருகின்றன என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# ஜே.ஆரின் பேரன் கட்சி தாவல்



இலங்கையின் முதலாவது நிறைவேற்று அதிகார ஜனாதிபதியான ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கியஸ்தர் ஜே.ஆர். ஜயவர்தனவின் பேரன் பிரதீப் ஜயவர்தன, சர்வஜன அதிகாரம் கட்சியுடன் இணைந்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியில் இருந்து, ஐக்கிய மக்கள் சக்தி பக்கம் தாவியிருந்த நிலையிலேயே அவர் தற்போது மீண்டும் கட்சி தாவியுள்ளார்.

அவருடன் இணைந்து மேலும் சில பிரதேச அரசியல்வாதிகளும் சர்வஜன அதிகாரம் கட்சியுடன் இணைந்துள்ளனர்.

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் சர்வஜன அதிகாரம் கட்சியின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்காகவே இணைந்துள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர்.







# வீதி அபிவிருத்தி மிக மிக முக்கியம்

## வடக்கு ஆளுநர் வேதநாயகன் தெரிவிப்பு

“வீதிகளைப் புனரமைப்புச் செய்யாமல் எந்தவொரு அபிவிருத்தியும் சாத்தியமில்லை. வீதி அபிவிருத்தி மிக மிக முக்கியமானது.”

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

பருத்தித்துறை – பொன்னாலை வீதியில், தொண்டைமனாறு அரசடி முதல் பருத்தித்துறை துறைமுகம் வரையிலான வீதியின் புனரமைப்பு அங்குரார்ப்பண நிகழ்வு வல்வெட்டித்துறை சந்தியில் நேற்று வியாழக்கிழமை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் கலந்துகொண்ட வடக்கு மாகாண ஆளுநர் உரையாற்றுகையில்,

“கடற்கரையோரமாகச் செல்லும் இந்த வீதியின் பாதுகாப்புச் சுவர்கள் கூட கடந்த காலத்தில் விழுந்துள்ளன. மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட இந்த வீதி புனரமைக்கப்படுவது முக்கியமானது.

மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் ஜனாதிபதி வீதிப் புனரமைப்புக்கு நிதி கோரியிருந்தார். அதற்கு அமைவாக நிதியும் ஒதுக்கப்பட்டிருக்கின்றது.

இதற்காக ஜனாதிபதிக்கும், நெடுஞ்சாலைகள் அமைச்சர் பிமல் ரத்நாயக்கவுக்கும் இந்த நேரத்தில் வடக்கு மக்கள் சார்பில் நன்றிகளைக் கூறுகின்றேன்.

அரசு வடக்கு மாகாணத்தின் வீதி அபிவிருத்திக்காக இந்த ஆண்டுக்கு மாத்திரம் 5 ஆயிரம் மில்லியன் ரூபாவை ஒதுக்கியிருக்கின்றது. எதிர்காலத்தில் இங்கு பல வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும்.” – என்றார்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய வீதி அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் ரி.பாஸ்கரன்,

“இந்த வீதியை சில இடங்களில் அகலிப்புச் செய்யவேண்டியிருக்கின்றது. மக்கள் தங்கள் காணிகளை விட்டுத்தந்து உதவி செய்ய வேண்டும். அதேபோல, மக்களின் குடியிருப்புக்கான நீர் விநியோகமோ அல்லது வேறு நடவடிக்கைகளுக்காகவே வீதியை அபிவிருத்தி செய்த பின்னர் அதை வெட்டுவதற்கு நாம் இடமளிக்க மாட்டோம். எனவே, அவ்வாறான செயற்பாடுகள் ஏதும் முன்னெடுக்க திட்டமிட்டிருந்தால் அதை வீதி அபிவிருத்தி பணி ஆரம்பிக்க முன்னரே செய்து முடிக்குமாறு கோருகின்றேன்.” – என்றார்.

போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் மேலதிக செயலாளர் ஜீவநாதன் உரையாற்றுகையில்,

“இலங்கையிலுள்ள 9 மாகாணங்களிடமிருந்தும் எமது அமைச்சு திட்டமுன்மொழிவுகளைக் கோரியது. வடக்கு மாகாணத்திலிருந்துதான் எமக்கு அடுத்த நாளே திட்டமுன்மொழிவுகள் கிடைக்கப்பெற்றிருந்தன. ஏனைய மாகாணங்களிலிருந்து எம்மை தொடர்புகொண்டு விளக்கங்கள் கேட்கின்றனரே தவிர திட்டமுன்மொழிவுகளை இன்னமும் அனுப்பவில்லை.

உண்மையில் உங்களுக்கு வடக்கு மாகாண ஆளுநராக மிகச் சிறந்த நிர்வாகியான நாகலிங்கம் வேதநாயகன் கிடைத்துள்ளார். அதேபோல் அவருக்குப் பக்கபலமாக பிரதம செயலராக இளங்கோவன் இருக்கின்றார்.” – என்றார்.

இந்த நிகழ்வில் கடற்றொழில் அமைச்சர் இ.சந்திரசேகரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான க.இளங்குமரன், ஜெ.ரஜீவன், வடக்கு மாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், யாழ். மாவட்ட செயலர் ம.பிரதீபன், பருத்தித்துறை பிரதேச செயலர் சி.சத்தியசீலன் ஆகியோர் கலந்துகொண்டனர்.











# விளக்கமறியலில் உள்ள மேர்வின் சிறைச்சாலை வைத்தியசாலையில்



கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணைங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா மஹற சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்று சிறைச்சாலை ஆணையாளர் காமினி பி. திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

சிறைச்சாலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள மேர்வின் சில்வாவுக்கு மேலதிக வசதிகள் எதுவும் வழங்கப்படவில்லை என்று சிறைச்சாலை ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

முன்னாள் அமைச்சர் மேர்வின் சில்வா கிரிபத்கொடை பிரதேசத்தில் உள்ள காணி ஒன்றுக்குப் போலி ஆவணைங்களைத் தயாரித்து பண மோசடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டின் பேரில் பத்தரமுல்லை பிரதேசத்தில் உள்ள அவரது வீட்டில் வைத்து கடந்த புதன்கிழமை குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளைஞரின் சடலம் மீட்பு!



அம்பாந்தோட்டை, அங்குனுகொலபெலெஸ்ஸ, அபேசேகர பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை காலை இளைஞர் ஒருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அபேசேகர பிரதேசத்தைச் சேர்ந்த 23 வயதுடைய இளைஞரே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

இளைஞரின் சடலத்துக்கு அருகில் வைத்து மோட்டார் சைக்கிள் மற்றும் கையடக்கத் தொலைபேசி என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இது கொலையாக இருக்கலாம் என்று பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.




## பெண் வைத்தியர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

34 வயதுடைய பிரதான சந்தேகநபர் அனுராதபுரம் பொலிஸாரால் நேற்று வியாழக்கிழமை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்தச் சம்பவம் தொடர்பில் பிரதான சந்தேகநபரின் சகோதரி உட்பட இருவர் அனுராதபுரம் பொலிஸாரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை இரவு கைது செய்யப்பட்டுள்ளனர்.

பிரதான சந்தேகநபர் தலைமறைவாக இருப்பதற்கு உதவி செய்த குற்றச்சாட்டின் பேரில் அவரது சகோதரி கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்நிலையில், மற்றைய சந்தேகநபர், பாலியல் வன்கொடுமைக்கு உள்ளான பெண் வைத்தியரிடமிருந்து பிரதான சந்தேகநபரால் திருடப்பட்ட கையடக்கத் தொலைபேசியை தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளார்.

37 வயதுடைய பெண்ணும், 27 வயதுடைய ஆணுமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி இருவரையும் எதிர்வரும் 17ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு அனுராதபுரம் நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை அனுராதபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உள்ளூராட்சித் தேர்தலில் சமல் களமிறங்கமாட்டார்

## மொட்டு எம்.பி. தெரிவிப்பு



"உள்ளூராட்சி சபைத் தேர்தலில் முன்னாள் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ போட்டியிடமாட்டார்." - என்று ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுன கட்சியின் அம்பாந்தோட்ட மாவட்ட நாடாளு மன்ற உறுப்பினர் டீ.வீ. சானக தெரிவித்தார்.

பிரதேச சபைத் தேர்தலில் தான் போட்டியிடவுள்ளார் என்று சமல் ராஜபக்ஷ சில தினங்களுக்கு முன்னர் பகிரங்கமாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில் இது தொடர்பில் கருத்துரைக்கும்போதே சானக எம்.பி. மேற்படி தகவலை வெளியிட்டார்.

"நகைச்சுவைக்காகவே சமல் ராஜபக்ஷ அப்படியொரு தகவலை வெளியிட்டார். அவர் தேர்தலில் போட்டியிடமாட்டார். நகைச்சுவையாக கருத்து வெளியிடும் சுதந்திரம் அவருக்கு இல்லையா?" - என்றார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பயன்படுத்தி இரண்டு கோடி அறுபது லட்சம் ரூபாவை எரிபொருளுக்காகச் செலவிட்டுள்ளார்.

பிரதி சபாநாயகர் அஜித் ராஜபக்ஷ 6 வாகனங்களைப் பயன்படுத்தி ஒரு கோடி 40 லட்சம் ரூபாவும் அங்கஜன் இராமநாதன் நான்கு வாகனங்களைப் பயன்படுத்தி 78 லட்சம் ரூபாவும் எரி பொருளுக்குச் செலவிட்டிருக்கின்றனர்.

2024 இல் அவர்கள் அதிகாரத்தில் இருந்த ஒன்பது மாதத்தில் மஹிந்த யாப்பா அபேவர்தன ஒன்பது வாகனங்களைப் பயன்படுத்தி மூன்று கோடி 40 லட்சம் ரூபாவையும், அஜித் ராஜபக்ஷ ஆறு வாகனங்களைப் பயன்படுத்தி ஒரு கோடி 30 லட்சம் ரூபாவையும் அங்கஜன் இராமநாதன் நான்கு வாகனங்களைப் பயன்படுத்தி 72 லட்சம் ரூபாவையும் எரிபொருளுக்காகப் பயன்படுத்தி உள்ளனர்.

அவர்கள் செலவிட்டது பொதுமக்களின் வரிப்பணம். இப்படித் தண்ணீராய் எரிபொருளைப் பயன்படுத்திய விடயம் தொடர்பில் தற்போதைய சபாநாயகர் விசாரணை நடத்தி உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று அமைச்சர் பிமல் ரட்நாயக்கா கூறியிருக்கிறார்.

இந்த இந்த விடயங்களை விசாரிக்க புறப்பட்டால் ஆனைக்கு 'அல்வா' வாங்கிப் போட்ட கணக்காகத்தான் அது காட்டப்படும் என்பது நிச்சயம்.

---

## மாகாண சபை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது அலுவலகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது மேற்கண்டவாறு கூறிய அவர், மேலும் தெரிவித்ததாவது:-

"மாகாண சபைத் தேர்தல், மாகாண சபை முறைமை பற்றி எல்லோரும் இப்போது கதைக்கின்றனர்.

இதுவரையில் மாகாண சபை முறைமை வந்த காலப் பகுதியிலிருந்து மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் இணைத் தலைவராக மாகாண ஆளுநர் எல்லா மகாணங்களிலும் இருந்துள்ளார்கள். ஆனால், இப்போது எல்லா மாகாணங்களிலும் ஆளுநர்கள் இணைத் தலைவராக நியமிக்கப்படவில்லை. ஆக எந்தளவுக்கு இந்த அரசு மாகாண சபை முறைமையை விரும்புகின்றது என்பது இதிலிருந்து தெரிகின்றது.

தாங்கள் நியமித்த ஆளுநர்களையே இணைத்தலைவராக இவர்கள் நியமிக்க வில்லை. தாம் நியமித்த தமது கட்சியின் அரசியல்வாதியான தலைவரோடு மட்டும் நிறுத்திக் கொண்டார்கள். இதை யாரும் கவனிக்கவில்லை.

மாகாண நிர்வாகத்தையும் மத்திய நிர்வாகத்தையும் ஒருங்கிணைப்பதற்கான தளமாக மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இருக்கின்றது. அதற்காகவே மாவட்ட இணைத் தலைவர்களாக ஆளுநர்கள் நியமிக்கப்பட்டார்கள். ஆனால், இந்த அரசு அதைச் செய்யவில்லை. இதில் இருந்து இந்த அரசு மாகாண சபை முறைமையில் எவ்வளவு விசுவாசமாக உள்ளது என்பது தெரிகின்றது.

ஆளுநரும் அவர்களது நியமனம், மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவரும் கட்சி நியமனம். ஆகவே, மத்திய அரசு தேசிய மக்கள் சக்தியுடையது. இந்த நாடாளுமன்றமும் அவர்களுடையதாக இருக்கலாம். ஆனால், உள்ளூராட்சி சபை என்பது உள்ளூர் மக்களுடையது. உள்ளூர் கட்சிகளின் தலைமையில் உள்ளூராட்சி சபைகள் இருக்க வேண்டும். இதைத் தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

இலங்கைமுழுவதும்மாவட்டஅபிவிருத்திக் குழுவில் இணைத் தலைவர்களாக அவர்களது ஆளுநர்களையே அநுர அரசு நியமிக்காததை வைத்துக்கொண்டே மாகாண சபை முறைமையில் அவர்கள் எவ்வளவு கரிசனை வைத்திருக்கின்றார்கள் என்பதை எமது தமிழ் மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்." - என்றார்.

---

## அநுர வெறும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

கூட சட்டத்தின் முன் நிறுத்த முடியாது போயுள்ள நிலையில் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வெறும் வாய்ச் சொல் வீரர் மாத்திரமே என்பது தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது."

- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் சமிந்த விஜேசிறி தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று வியாழக்கிழமை ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்த அவர், மேலும் குறிப்பிடுகையில்,

"ஜனாதிபதி அநுரகுமார திஸா நாயக்க வெறும் வாய்ச்சொல் வீரர் மாத்திரமே என்பது தற்போது வெளிப்படுத்தப்பட்டுள்ளது. ஆட்சியைப் பொறுப்பேற்று இத்தனை மாதங்கள் கடந்துள்ள போதிலும், ஊழல், மோசடி குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய ஒருவர் கூட இதுவரை சட்டத்தின் முன் நிறுத்தப்படவில்லை.

அதுவொருபுறமிருக்கையில், முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் கூட இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை. இரவு வேளைகளில் வீடு வீடாகச் சென்று அவரைத் தேடுகின்றனர். அதேபோன்று துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்துடன் தொடர்புடைய செவ்வந்தி என்ற சந்தேகநபரும் இன்னும் கைது செய்யப்படவில்லை. ஊழல், மோசடிக் காரர்களைக் கைது செய்வதாகக் கூறியவர்களுக்கு இவ்வாறான சந்தேகநபர்களைக் கூட கைது செய்ய முடியாத நிலைமையே காணப்படுகின்றது.

மேலதிக வகுப்பொன்றில் மாணவன் ஒருவரைக் கொடூரமாகத் தாக்கிய ஆசிரியரும் இன்று தலைமறைவாகியுள்ளார். இவை அனைத்தையும் புறந்தள்ளி 15ஆம் திகதி காலை குரங்குகளைப் பிடிக்குமாறு அரசு அறிவித்துள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளால் அரசு கேலிக்குள்ளாகியுள்ளது. இது அரசின் இயலாமையின் வெளிப்பாடு என்பதை மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவும், அவர் தலைமையிலான அரசும் தோற்றுப் போயுள்ளன. பொய்களால் ஏமாற்றமடைந்து அதிருப்தியிலுள்ள மக்களை அதிலிருந்து மீட்பதற்கான பணிகளைப் பொறுப்புள்ள எதிர்க்கட்சியாக ஐக்கிய மக்கள் சக்தி முன்னெடுக்கும். அதற்கமைய உள்ளூராட்சி சபைத் தேர்தலில் வெற்றியைப் பெற்றுக்கொள்ளும் இயலுமையும் எமக்கு இருக்கின்றது."

- என்றார்.

---

## பூஸா சிறையில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் காலி, அக்மீமன, தலகஹ பகுதியில் இடம்பெற்றுள்ளது.

நேற்று பிற்பகல் மேற்படி அப்பர் தமது வீட்டு முற்றத்தில் இருந்தபோது இரண்டு மோட்டார் சைக்கிள்களில் வந்த மர்ம நபர்கள் துப்பாக்கிச்சூட்டை நடத்திவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர்.

9 மில்லிமீற்றர் ரக கைத்துப்பாக்கியால் இந்தத் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கொலையாளிகளைக் கைது செய்வதற்கான விசாரணைகளைப் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை, மேற்படி சம்பவத்துடன் தொடர்புடைய கொலையாளிகள் பயன்படுத்தினர் என நம்பப்படும் இரண்டு கைவிடப்பட்ட மோட்டார் சைக்கிள்கள் யக்கலமுல்லவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன என்று பொலிஸ் ஊடகப் பிரிவு நேற்று இரவு தெரிவித்துள்ளது.









# கல்வி இல்லாமல் எதுவும் இல்லை!

## கிளிநொச்சியில் மாணவர்கள் முன்னிலையில் ஆளுநர் உரை

"கல்வி இல்லாமல் எதுவும் இல்லை. மாணவர்கள் அதை நினைவிலிருத்தி தங்கள் கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கவேண்டும்."

– இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் ஆலோசனை கூறினார்.

கிளிநொச்சி சிவபாதகலையகம் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் புனர்வாழ்வும் புதுவாழ்வும் அமைப்பால் நிர்மாணிக்கப்பட்ட கட்டடம் வடக்கு மாகாண ஆளுநரால் நேற்றுமுன்தினம் புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தலைமை உரையாற்றிய பாடசாலை அதிபர், பாடசாலைக்கு வருவதற்கான வீதியைப் புனரமைத்துத் தருமாறு கோரிக்கை முன்வைத்தார். அதேபோல் பாடசாலைக்கு அருகிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைப் பாதுகாப்பான ரயில் கடவையாக மாற்றியமைக்குமாறும் கோரிக்கை முன்வைத்தார்.

இதன் பின்னர் உரையாற்றிய ஆளுநர், அதிபரின் கோரிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்துவதாகக் குறிப்பிட்டதுடன், அரசின் 5 ஆயிரம் மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீட்டில் புனரமைக்கப்படும் வீதிகளின் அபிவிருத்திக்குள் குறித்த வீதியை எதிர்காலத்தில் இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

கல்வி அபிவிருத்தி ஊடாகவே கிராமத்தை அபிவிருத்தி செய்ய முடியும் எனச் சுட்டிக்காட்டிய ஆளுநர், மாணவர்கள் விடாமுயற்சியுடனும் ஆர்வத்துடனும் கல்வியைக் கற்பதன் மூலமே சாதிக்க முடியும் எனவும் குறிப்பிட்டார்.

இந்தக் கட்டடத்துக்கான நிதியுதவி, கலாநிதி வேலாயுதம் சர்வேஸ்வரன் மற்றும் திருமதி ஆனந்தி சர்வேஸ்வரன் குடும்பத்தினரால் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.









# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சிரத்தை கொள்க!

போதைப் பொருள் பாவனைக்கும் மதுவுக்கும் அடிமையாகும் ஒரு மோசமான சமுதாயம் உருவாகி வருகையில், பெண்களுக்கு எதிரான கொடூரமான குற்றங்கள் பற்றிய செய்திகள் சமூக ஊடகங்களில் பரபரப்பு விடயமாக மாறி வருகின்றன.

பெண்களைப் போற்றி மதிக்கும் சர்வதேச மகளிர் தினம் கொண்டாடப்பட்டு இரண்டு நாள்கள் முடிவதற்கு இடையில் அநுராதபுரம் போதனா வைத்தியசாலை பெண் வைத்தியர் ஒருவர் முன்னாள் படைச் சிப்பாய் ஒருவரினால் கத்தி முனையில் பாலியல் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை பற்றிய செய்தி அதிர்ச்சி தருவதாக வெளியாகி இருக்கின்றது.

பாலியல் குற்றங்களும் துஷ்பிரயோகங்களும் சமூகத்தில் தவிர்க்க முடியாத விவகாரமாகத் தொடர்ந்து இடம் பெற்று வந்தாலும் இந்தக் குற்றங்கள் எல்லா மட்டங்களிலும் இடம்பெற்று வருகின்றமை மறுக்கப்படக்கூடியது அல்ல.

2007 நவம்பரில் நீர் கொழும்பு பொது வைத்தியசாலையில் 23 வயதுடைய - ஆடை தொழிற்சாலையில் பணியாற்றுகின்ற - ஓர் இளம் பெண் பாலியல் வல்லுறவுக்கு உட்படுத்தப்பட்டு, கழுத்து நெரிக்கப்பட்டு ஆறாவது மாடியில் இருந்து தள்ளி விழுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டார். ஏழு ஆண்டுகள் தாமதத்தின் பின்னர் - 2014 இல் - அந்தக் குற்றத்தை இழைத்த மருத்துவ அதிகாரி பாலியல் வல்லுறவு மற்றும் கொலை குற்றங்களில் குற்றவாளியாகக் காணப்பட்டார். அவர் ஏழு வருடங்கள் சிறையிலிருந்த பின்னர் தற்போது பிணையில் வெளியில் இருக்கின்றார்.

அநுராதபுரத்தில் தற்போது பெண் மருத்துவ அதிகாரி கொடூரத்துக்கு உள்ளாக்கப்பட்ட செய்தி பரபரப்பாக வெளியானமையை அடுத்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் பணியாற்றும் மருத்துவர்களின் பாதுகாப்புத் தொடர்பான நெருக்கடிகள், சிக்கல்கள் பற்றி பல்வேறு செய்திகள் சமூக ஊடகங்களில் வெளியாகி வருகின்றன.

இதற்கிடையில் -

கிராம சேவையாளர்கள் தமக்கு தேவையான பாதுகாப்பை வழங்குவதற்கான வேலைத்திட்டம் ஒன்றை தயாரிக்குமாறு கோரி நேற்று முதல் மட்டுப்படுத்தப்பட்ட அள்வில் தொழிற்சங்க நடவடிக்கைகளை ஆரம்பித்துள்ளனர் என இலங்கை கிராம உத்தியோகத்தர் சங்கம் தெரிவித்துள்ளது.

தமது சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்களினால் இந்த தொழில்சார் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாகவும், ஏனைய சங்கங்களின் பிரதிநிதிகளும் இதற்கு ஆதரவளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதாகவும் சங்கத்தின் தேசிய அமைப்பாளர் நெவில் விஜேரத்ன தெரிவித்துள்ளார்.

கிராம உத்தியோகத்தர்களில் அறுபது சதவீதத்திற்கும் அதிகமானவர்கள் பெண்கள் எனவும், பெரும்பாலான கிராம உத்தியோகத்தர்களின் அலுவலகங்கள் தனிமைப் படுத்தப்பட்ட அல்லது மக்கள் நடமாட்டம் இல்லாத பிரதேசங்களில் அமைந்துள்ளன எனவும் அவர் கூறினார்.

தனிமைப்படுத்தப்பட்ட அலுவலகங்களில் பணிபுரியும் பெண் உத்தியோகத்தர்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியுள்ளனர் எனவும் நெவில் விஜேரத்ன குறிப்பிட்டுள்ளார்.

அரச மற்றும் பொது ஊழியர்களின் சேவை நேரப் பாதுகாப்புத் தொடர்பில் விசேட கவனம் செலுத்த வேண்டிய ஒரு தேவை எழுந்திருக்கின்றது. அரசு சிரத்தை எடுத்து நடவடிக்கை எடுக்க வேண்டிய விவகாரம் இது.

# போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ரஷ்யா பொருளாதார தடையை சந்திக்க நேரிடும்

## ட்ரம்ப் எச்சரிக்கை

சவதி அரேபியாவில் நடந்த அமெரிக்கா – உக்ரைன் பேச்சுவார்த்தையில் உக்ரைன் ஒப்புதல் அளித்துள்ள ஒருமாத போர் நிறுத்தத்தை ஏற்றுக் கொள்ளாவிட்டால் ரஷ்யா குறிப்பிடத்தகுந்த பொருளாதார தடைகளை சந்திக்க வேண்டியது இருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

வெள்ளைமாளிகையில் செய்தியாளர்களை சந்தித்த ட்ரம்ப் கூறுகையில்,

“எங்களுடைய பிரதிநிதிகள் ரஷ்யாவுக்குச் செல்ல இருக்கின்றனர். ரஷ்யா போர் நிறுத்தத்தை ஏற்றுக்கொள்ளும் என்று நான் நம்புகிறேன். ரஷ்யாவுக்கு பேரழிவினை ஏற்படுத்தும் அந்நாட்டுக்கு மோசமான விளைவுகளை உண்டாக்கும் காரியங்களை என்னால் செய்ய முடியும். அம்முடிவினை நான் விரும்பவில்லை. ஆனால் நான் அமைதியைக் காண விரும்புகிறேன்.” என்று தெரிவித்தார்.

முன்னதாக, சவூதி அரேபியாவில் அமெரிக்காவுடன் நடந்த பேச்சுவார்த்தையில் அந்நாடு முன்மொழிந்த 30 நாள்கள் போர் நிறுத்தத்துக்கு உக்ரைன் ஒப்புக் கொண்டது. ரஷ்யாவுடன் உடனடியாக பேச்சுவார்த்தையில் ஈடுபடவும் உக்ரைன் சம்மதம் தெரிவித்திருந்தது. இந்த போர்நிறுத்த ஒப்பந்தம், நிலம், கடல் மற்றும் வான்வழித்தாக்குதல்களை உடனடியாக நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்துகிறது.

ஆனால் ரஷ்யா இதுகுறித்து இன்னும் உறுதியான நிலைப்பாட்டினை எடுக்கவில்லை. ஒரு முடிவினை எட்டுவதற்கு முன்பாக அமெரிக்காவிடமிருந்து கூடுதல் தகவலுக்காக



காத்திருப்பதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

இதனிடையே, உக்ரைனுடன் போர்நிறுத்தத்துக்கு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடின் ஒப்புக்கொள்வார் என்றாலும் அதற்கு முன்பாக தனது நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும் என்று விரும்புகிறார். இதனால் பேச்சுவார்த்தை இழுபறியாக வாய்ப்புள்ளது என்று கூறப்படுகிறது.

இதனிடையே, காசா மற்றும் உக்ரைன் விவகாரங்களில் மத்தியஸ்தராக இருந்த ட்ரம்ப்பின் பிரதிநிதி ஸ்டீவ் விட்கோஃப் இந்த வாரத்தில் ஒப்பந்தம் குறித்து விவாதிக்க ரஷ்யா செல்வார் என்று அமெரிக்கா தெரிவித்துள்ளது.

ரஷ்ய ஜனாதிபதியுடன் தனிப்பட்ட முறையில் பேசுவது குறித்து எதுவும் தெரிவிக்காத அமெரிக்க ஜனாதிபதி, ரஷ்யா போர் நிறுத்தத்தை ஏற்கும் என நம்புவதாக உறுதிப்படுத்தியுள்ளார்.

# மேற்கு ரஷ்யாவில் உக்ரைனியப் படைகளை விரைவில் தோற்கடிக்குமாறு புட்டின் உத்தரவு







ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், இராணுவ சீருடை அணிந்த நிலையில், மேற்கு ரஷ்யாவில் உக்ரைனியப் படைகளை விரைவாக தோற்கடிக்க உத்தரவிட்டுள்ளார்.

இது போர்நிறுத்தம் குறித்து விவாதிக்கத் தயாராகும் நிலையில், மொஸ்கோ இராணுவ முன்முயற்சியை மேற்கொண்டுள்ளது என்பதற்கான சமிக்ஞையாகும்.

அண்மைய மாதங்களில் ரஷ்யாவின் போர் முனை முன்னேற்றங்களும், உக்ரேனில் மூன்று வருடங்களாக நீடித்து வரும் மோதலை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான அமைதி ஒப்பந்தத்தை எட்ட அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் முயற்சியும், மேற்கத்திய நாடுகளின் ஆதரவுடன் இயங்கும் கெய்வ் போரில் தோல்வியடையக் கூடும் என்ற அச்சத்தை எழுப்பியுள்ளது.

ட்ரம்பின் மத்திய கிழக்கு சிறப்பு தூதர் ஸ்டீவ் விட்காஃப் மொஸ்கோவிற்கு வந்து புட்டினை சந்தித்தார்.

அமெரிக்க தேசிய பாதுகாப்பு ஆலோசகர் மைக் வால்ட்ஸ் புதன்கிழமை போர்நிறுத்த யோசனை குறித்த விவரங்களை வழங்கியதாகவும், ரஷ்யா அதைப் பற்றி விவாதிக்க தயாராக இருப்பதாகவும் ரஷ்ய அதிகாரிகள் தெரிவித்தனர்.

உக்ரேன் ஆதரிப்பதாகக் கூறிய 30 நாள்கள் போர்நிறுத்தத்திற்கான அமெரிக்க முன்மொழிவை மொஸ்கோ ஒப்புக் கொள்ளும் என்று நம்புவதாக ட்ரம்ப் கடந்த புதன்கிழமை வெள்ளை மாளிகையில் தெரிவித்திருந்தார்.

ட்ரம்ப் பேசிய சில மணி நேரங்களுக்குப் பிறகு, ரஷ்யப் படைகளின் மின்னல் தாக்குதலுக்குப் பின்னர் உக்ரைன் தனது நிலையை இழக்கவிருக்கும் மேற்கு ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதிக்கு பச்சை நிற உருமறைப்பு சீருடையில் புட்டின் வருகை தரும் காட்சிகளை கிரெம்ளின் வெளியிட்டது.

இதன்போது பேசிய புட்டின், எதிர்காலத்தில், “மிகக் குறுகிய காலத்தில், குர்ஸ்க் பிராந்தியத்தில் வேரூன்றியிருக்கும் எதிரியை (உக்ரைன்) தீர்க்கமாக தோற்கடிப்பதே எங்கள் பணி.

நிச்சயமாக, மாநில எல்லையில் ஒரு பாதுகாப்பு மண்டலத்தை உருவாக்குவது பற்றி நாம் சிந்திக்க வேண்டும்.” என்று கூறினார்.

எனினும், போர் நிறுத்த யோசனையை அவர் குறிப்பிடவில்லை.

2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு லட்சக்கணக்கான மக்களைக் கொன்று காயப்படுத்தியது, மில்லியன் கணக்கான மக்களை இடம்பெயர்ந்தது, நகரங்களை இடிபாடுகளாக்கியது.

மேலும், ஆறு தசாப்தங்களில் மொஸ்கோவிற்கும் மேற்கு நாடுகளுக்கும் இடையிலான மிகப்பெரிய மோதலைத் தூண்டியது.

கிழக்கு உக்ரைனில் இருந்து ரஷ்யப் படைகளைத் திசை திருப்பவும், பேரம் பேசும் வாய்ப்பைப் பெறவும், புட்டினை சங்கடப்படுத்தவும், உக்ரேன் கடந்த ஆகஸ்ட் மாதம் எல்லையைத் தாண்டி குர்ஸ்க் பகுதிக்குள் நுழைந்தது.

இது 1941 ஆம் ஆண்டு நாஜி படையெடுப்பிற்குப் பின்னர் ரஷ்ய பிரதேசத்தின் மீதான மிகப்பெரிய தாக்குதலாகும்.

ரஷ்ய இராணுவத்தின் கூற்றுப்படி, கடந்த கோடையில் ஊடுருவலின் உச்சத்தில் 1,300 சதுர கிமீ (500 சதுர மைல்) இருந்த குர்ஸ்கில், இப்போது உக்ரேனின் பகுதி 200 சதுர கிமீ (77 சதுர மைல்) க்கும் குறைவாக உள்ளது.

# மும்மொழி கொள்கையில் தி.மு.க. இரட்டை வேடம்

## மக்களவையில் அமைச்சர் நிர்மலா சீதாரமன் ஆவேசம்

தேசிய கல்விக் கொள்கை விவகாரத்தில், தமிழக எம்.பிக்கள் காட்டும் எதிர்ப்பு அநாகரீகமானது என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் நாடாளுமன்றத்தில் கூறியதற்காக கடும் கண்டனம் தெரிவிக்கப்பட்டது. இதையடுத்து அவர் தான் கூறியதை திரும்பபெற்றார்.

இந்த விவகாரத்தை நேற்று மக்களவையில் எழுப்பிய மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன், மேலும் உரையாற்றுகையில்,

“அநாகரீமாக போராட்டம் நடத்துகிறீர்கள் என மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதற்காக தி.மு.க. எம்.பி.க்கள் போராட்டம் நடத்துகிறீர்கள். தர்மேந்திர பிரதான் கூறியதை திரும்ப பெற வைத்தார்கள். அவர்களிடம் பணிவுடன் ஒன்று கேட்க விரும்புகிறேன்.

ஒரு பிரபல மூத்த தலைவர் தமிழ் பற்றி கூறியதை இங்கு குறிப்பிட விரும்புகிறேன். அவருடைய பெயரை குறிப்பிட விரும்ப வில்லை. ஆனால் அவர் கூறியதை வாசிக்கிறேன். அவர் யார் என தமிழ் மொழியை அறிந்தவர்களுக்கு தெரியும். அவர் கூறியது கடந்த 1943 ஆம் ஆண்டு நவம்பர் 27 ஆம் திகதி வெளியான விடுதலை இதழில் வெளியிடப்பட்டது.

‘தமிழ் படித்தால் பிச்சை கூட கிடைக்காது. தமிழ் படித்தது பிச்சை எடுப்பதை தவிர உயிர் வாழ ஒன்றுக்கும் பயன்படவில்லை. இதற்காக செலவிட்ட காலத்தை வேறு துறையில் செலவிட்டிருந்தால், வாழ்வில் பயன் ஏற்பட்டிருக்கும்’ என்பதை 100 ஆண்டுகளுக்கு முன்பு தமிழ் கற்ற ஒரு அனுபவ புலவர் கூறினார். தமிழை பற்றி எவ்வளவு இழிவாக அவர் கூறினார் என்பதற்கு இந்த ஒரு வரி போதும்.

ஆனால், அவரது போட்டோவை தி.மு.க. எம்.பி.க்கள் தங்கள் அறையில் வைத்து வழிபடுகிறீர்கள். ஆனால் அநாகரீகமாக போராட்டம் நடத்துகிறீர்கள் என அமைச்சர் தர்மேந்திர பிரதான் கூறியதற்காக அவரை மன்னிப்பு கேட்க வேண்டும் என கூறுகிறீர்கள்.

அதே மூத்த தலைவர் துக்ளக் பொன் விழா ஆண்டு இதழில், ‘இந்த தமிழ் மொழியானது, காட்டுமிராண்டி மொழி என நான் ஏன் கூறுகிறேன்? என்று இன்று கோபித்துகொள்ளும் யோக்கியர்கள் யாரும் சிந்தித்து பேசுவதில்லை. வாய் இருக்கிறது என்று எதையாவது பேசி வயிறு வளர்ப்போம் என்பதை தவிர அறிவையோ, மானத்தையா, ஒழுக்கத்தையோ பற்றி சிறிது கூட சிந்திக்காமல் பேசிவருகிறார்கள். இப்படிபட்ட இவர்கள் போக்கு படியே சிந்தித்தாலும், தமிழ் மொழி 3000 லிருந்து 4000 ஆண்டுகளுக்கு முந்தி ஏற்பட்ட மொழி என்பதை, தமிழன் பெருமைக்கு ஒரு சாதனமாய் கொண்டு பேசுகிறார்கள். நானும் தமிழ் காட்டுமிராண்டி மொழி என்பதற்கு அதையேதான் முக்கிய காரணமாக சொல்கிறேன். அன்றிருந்த மக்களின் நிலை என்ன? அவன் சிவனாக இருக்கட்டும், அகஸ்தியனாகட்டும், மற்றும் எவன்தான் ஆகட்டும். இவர்களை பற்றி தெரிந்துகொள்ள உனக்கு புத்தியில்லாவிட்டால், இத்தமிழை பற்றி பேச நீ தகுதி உடையவனா? இவர்களை பற்றியும், இவர்கள் வாழ்ந்த வாழ்க்கையையும் பற்றியும் நீங்கள் படிக்காமல் தமிழ் பழமையான என மொழி என கூறுகிறார்கள்.’ என்றார்.

தமிழ் காட்டுமிராண்டி மொழி என மீண்டும் மீண்டும் கூறியவரை இவர்கள் வழிபடுகிறார்கள்? அவரைத்தான் திராவிட இயக்கத்தின் அடையாளம் என்கிறார்கள். இவர்களின் கபட நாடகத்தை பாருங்கள். தமிழை நேசிப்பவர்கள் என கூறுபவர்கள், தமிழ் காட்டுமிராண்டி மொழி என கூறியவரை எப்படி வழிபடுகின்றனர்?

அதே நபர் , ‘தமிழ் அறிஞர்களை ஆயுள் முழுவதும் சிறையில் அடைக்க வேண்டும். சமூக முன்னேற்றத்துக்கு இவர்கள் எதுவும் செய்யாததால் அவர்களை தூக்கிலிட வேண்டும். தமிழை நேசித்தவர்களுக்கு இவர்களின் பங்களிப்பு எதுவும் இல்லை’ என்று கூறினார். இது கடந்த 1967 ஆம் ஆண்டு மார்ச் 16 ஆம் திகதி வெளியான விடுதலை இதழில் வெளியிடப்பட்டுள்ளது. இத்தகைய தலைவரை வழிபடுவதுதான் திராவிட மொடல்.

மேலும், அவர் கடந்த 1967 ஆம் ஆண்டு நடைபெற்ற உலக தமிழ் மாநாட்டில் பங்கேற்றவர்களை முட்டாள்கள் என கூறினார். இதெல்லாம் அவரின் பொன்னான வார்த்தைகள். தமிழை கற்பது எதற்கும் உதவாது, பிச்சை எடுக்க கூட உதவாது என கூறினார்.

இதற்கெல்லாம் எதிர்ப்பு தெரிக்காமல், தமிழை நேசிப்பாதக கூறும் இவர்கள் இந்தியை திணிப்பதாக கூறுகிறார்கள். தமிழை கற்க வேண்டும் என்றுதான் புதிய கல்விகொள்கை கூறுகிறது. ஆனால், இவர்கள் இந்தியை திணிப்தாக கற்பனை செய்து கொண்டு, தமிழ்நாட்டில் தவறாக அரசியல் குழப்தை ஏற்படுத்தி, தமிழக குழந்தைகள் கல்வி கற்கும் உரிமையை மறுக்கிறார்கள். தமிழ் காட்டுமிராண்டி மொழி என கூறியவரை வழிபடுகிறார்கள்.

இதையெல்லாம் நான் நாடளுமன்றத்தில் எடுத்து சொல்வேன் என்ற பயம் காரணமாக, தமிழக எம்.பி.க்கள் நாடாளுமன்றத்தை விட்டு ஓடிவிட்டனர். ஆனால், இவர்கள் இதை டி.வியில் பார்ப்பார்கள் என எனக்கு தெரியும். தமிழ்நாட்டு மக்களும் இதை டி.வியில் பார்ப்பார்கள். இவர்களின் நடிப்பை எடுத்துரைக்க வேண்டும். பிரதமர் மோடி கொண்டுவந்துள்ள புதிய கல்வி கொள்கை ஏழை, எளிய மக்களுக்கு உதவியாக இருக்கும் என நான் தமிழக மக்களுக்கு கூற விரும்புகிறேன்.” என்றார்.

# இளையராஜா இசைப் பயணத்தை அரசு சார்பில் கொண்டாட முடிவு

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



இளையராஜாவின் அரை நூற்றாண்டு காலத் திரையிசைப் பயணத்தை தமிழக அரசின் சார்பில் கொண்டாட முடிவெடுத்துள்ளதாக முதல்வர் ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து முதல்வர் ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில்,

“லண்டன்மாநகரில்சிம்பொனிசாதனை படைத்துத் திரும்பியுள்ள இளையராஜாவின் பயணத்துக்கு வாழ்த்திய என்னை நேரில் சந்தித்து நன்றி கூறினார். அவரது அரை நூற்றாண்டுகாலத் திரையிசைப் பயணத்தை அரசின் சார்பில் கொண்டாட முடிவெடுத்துள்ளோம். ராஜாவின் இசை ராஜ்ஜியத்தில் வாழும் ரசிகர்களின் பங்கேற்போடு இந்த விழா சிறக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

அத்துடன், இளையராஜா முதல்வர் ஸ்டாலினை அவரது இல்லத்தில் நேரில் சந்தித்து நன்றி தெரிவிக்கும் காணொலியையும் முதல்வர் பகிர்ந்துள்ளார். அதில் லண்டனில் நடைபெற்ற சிம்பொனி குறித்தும், அதற்கு வாசித்த ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழு குறித்தும் நெகிழ்ச்சியுடன் இளையராஜா முதல்வர் ஸ்டாலினிடம் பேசுகிறார். இந்த காணொலி சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

‘வேலியன்ட்’ என்ற தலைப்பில் பாரம்பரிய சிம்பொனி இசையை 35 நாள்களில் எழுதி முடித்திருப்பதாக இளையராஜா கடந்த ஆண்டு அறிவித்தார். லண்டனில் மார்ச் 8 ஆம் திகதி அரங்கேற்றம் செய்ய உள்ளதாக சில மாதங்களுக்கு முன்பு கூறினார். இந்நிலையில், கடந்த 6 ஆம் திகதி லண்டன் சென்ற இளையராஜா, அங்குள்ள ஈவென்டிம் அப்போலோ அரங்கில் சிம்பொனி இசையை அரங்கேற்றம் செய்தார். உலகின் மிகச் சிறந்த ராயல் பில்ஹார்மோனிக் இசைக்குழுவுடன் இணைந்து அவர் இதை அரங்கேற்றினார்.

அவரது இசைக் குறிப்புகளை நூற்றுக்கணக்கான கலைஞர்கள் பல்வேறு இசைக்கருவிகளில்ஒரேநேரத்தில்இசைத்தது பார்வையாளர்களை பரவசத்தில் ஆழ்த்தியது. இதன்மூலம், ஆசிய கண்டத்தில் இருந்து சிம்பொனியை எழுதி, அரங்கேற்றிய முதல் இசையமைப்பாளர் எனும் சாதனையை இளையராஜா படைத்துள்ளார். இசை ஜாம்பவான்கள் மொஸார்ட், பீத்தோவன், சாய்கோவ்ஸ்கி ஆகிய சிம்பொனி இசைக் கலைஞர்கள் வரிசையில் இளையராஜாவும் இணைந்துள்ளார்.

# உடல்நலம், யோகாசனம், ஆரோக்கிய உணவுகள் தொடர்பில் ஆயுர்வேத அணுகுமுறையிலான விளக்கச் செயலமர்வு யாழில்!

## 'ஆயுசு 100 - பரிபூரண நலவாழ்வு மையத்தின்' ஏற்பாட்டில்









'ஆயுசு 100 – பரிபூரண நலவாழ்வு மையத்தின்' ஏற்பாட்டில், ஆயுர்வேத அணுகுமுறையில் மனித உடல் – உள மேம்பாடு, அதனுடன் இணைந்ததான நோய் காப்பு ஃ தீர்க்கும் யோகாசனப் பயிற்சிகள், உடலுக்குப் பொருத்தமான ஆரோக்கிய உணவுகள் என்பன தொடர்பான விளக்கும் செயலமர்வு ஒன்று, யாழ்ப்பாணம் கொசி விடுதியில் நேற்றையதினம் நடைபெற்றது.

ஆயுசு 100 ஆயுர்வேத நிபுணர் குழாமைச் சேர்ந்த, சித்த – ஆயுர்வேத மருத்துவர் ஜெ.இரத்னலகி இந்தச் செயலமர்வை விளக்கப் படங்களுடன் சிறப்பாக நடாத்தியிருந்தார்.

பிரபஞ்சத்தின் தோற்றுவாயிலிருந்து, அதன் பிரதான கூறுகளான பஞ்ச பூதங்கள் எவ்வாறு வாதம், பித்தம், கபம் என்ற மூன்று வடிவில் மனித உடல் உருவாக்கத்தில் செல்வாக்குச் செலுத்தியுள்ளன என்பதையும், ஒவ்வொரு மனித உடலும் இந்தப் பஞ்ச பூதங்களின் வெவ்வேறு சேர்மானங்களான வாதம், பித்தம், கபம் என்பவற்றால் உருவானவையே என்பதையும் ஆயுர்வேத நூல்களில் கூறப்பட்டிருப்பதன்படி விளக்கினார் சித்த – ஆயுர்வேத மருத்துவர் இரத்னலகி.

இவ்வாறு ஒவ்வொரு மனித உடலினதும் வாதம், பித்தம், கபம் என்ற சேர்மானத்தை மதிப்பீடு செய்யும் ஆயுர்வேத பிரகிருதி பரிசோதனை குறித்தும், அதனைச் செய்துகொள்வதன் மூலம் எவ்வாறு ஒவ்வொருவரும் தமது உடலின் தன்மையைச் சரியாக அறிந்துகொண்டு அதற்குப் பொருத்தமான வாழ்க்கை வழிமுறைகளைப் பின்பற்றலாம் என்பது பற்றியும் பங்குபற்றியவர்களுக்கு அவர் தெளிவுபடுத்தினார்.

இந்த பிரகிருதியின் அடிப்படையிலேயே ஒவ்வொரு மனிதனும் உட்கொள்ளவேண்டிய உணவு வகைகள், பின்பற்றவேண்டிய வாழ்க்கை முறையில், காலநிலை மாற்றங்களுக்கேற்ப மேற்கொள்ளவேண்டிய செயற்பாடுகள், உடற்பயிற்சி, ஓய்வு, நித்திரை என்பன தீர்மானிக்கப்படுகிறது என்பதை விளக்கிய அவர், ஒவ்வொருவரும் தமது பிரகிருதியை அறிந்துகொண்டு அதற்ப ஆயுர்வேதம் பரிந்துரைக்கும் வாழக்கை வழிமுறையைப் பின்பற்றினாலே பெருமளவுக்கு நோய்களற்ற வாழ்வை வாழமுடியும் என்றும் குறிப்பிட்டார்.

இதற்கு அடுத்தபடியாக ஒருவர் யோகாசனம் செய்யவேண்டியதன் அவசியம் என்ன என்பதையும் விளக்கிக்கூறிய அவர், மனித உடல், மனம் என்பவற்றை ஒருங்கிணைக்கச்செய்யும் யோகாசனம் மூலம், உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்தி, உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை எவ்வாறு வளர்த்துக்கொள்ள முடியும் என்பதையும் தெளிவுபடுத்தினார்.

மனிதன் உட்கொள்ளவேண்டிய உணவு வகைகள் பற்றிய விளக்கங்களையும் வழங்கிய அவர், ஒவ்வொரு உணவு வகைகளிலும் இருக்கக்கூடிய சாத்விக், ரஜோ, தமோ குணாம்சங்கள் பற்றிய விளக்கங்களையும் செயலமர்வில் கலந்துகொண்டவர்களுக்குப் புரிய வைத்தார்.

உணவு அளவுக்கு ஒருவரின் மூச்சின் அவசியம் பற்றிக் கூறிய அவர், ஒவ்வொருவருடைய மூச்சின் தன்மைகளும், அதன் வேகமுமே அவரது ஆயுளைத் தீர்மானிக்கிறது என்பதையும், எனவே, பிராணாயாமம் என்று சொல்லப்படும் மூச்சுப் பயிற்சியில் ஈடுபடுவதன் மூலம் எவ்வாறு ஆயுளை அதிகரித்துக் கொள்ளலாம் என்பதையும் விளக்கினார்.

ஓய்வு, நித்திரை ஆகியவையும் மனித வாழ்வில் அவசியமானவை என்பதையும், அவை எவ்வாறு மனித உடலின் ஆரோக்கியம், நோய் எதிர்ப்பு சக்தி, மகிழ்வான வாழ்க்கை என்பற்றை உருவாக்க பங்களிப்புச் செய்கின்றன என்பதுபற்றியும் விளக்கிக் கூறினார்.

ஆயுசு 100 பரிபூரண நலவாழ்வு திட்டத்தை முன்னெடுத்துள்ள சிகரம் நிறுவனத்தின் பணிப்பாளர் கோடீஸ்வரன் ருஷாங்கன் இங்கு உரையாற்றும்போது, ஆயுர்வேத மருத்துவர் இரத்னலகி விளக்கிக்கூறியபடி ஒவ்வொருவரும் ஆயுர்வேத வழிமுறையில் பிரகிருதி என்று சொல்லப்படுகின்ற உடல் பரிசோதனையை ஆயுசு 100 பரிபூரண நலவாழ்வு மையத்தில் செய்துகொள்ள முடியும் என்றார்

அதனைச் செய்து, அவரவர் பிரகிருதியை அறிந்துகொண்டு, அதன் பின்னர், பொருத்தமான வகையில் யோகாசன பயிற்சி, பிராணாயாமம் போன்றவற்றில் ஈடுபடுவதற்கும் ஆயுசு 100 பரிபூரண நலவாழ்வு மையத்தில் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன என அவர் குறிப்பிட்டார்.

அதேபோல். ஆரோக்கிய உணவு வகைகளின் முக்கியத்துவம் கருதி, கொசி விடுதியில் வரைவில் ஆயுசு 100 பாரம்பரிய ஆரோக்கிய உணவுகளும் கிடைக்க ஏற்பாடுகள் செய்யப்படுகின்றன என்ச்வும், அவற்றையும் உட்கொண்டு ஒவ்வொருவரும் தமது உடல்நலத்தை மேம்படுத்தி பரிபூரண நலவாழ்வு நிலையை எய்த முடியும் என்றும் அவர் ஆலோசனை கூறினார்.

இந்த நிகழ்வில யாழ்ப்பாணத்தின் முன்னணி வங்கி முகாமையாளர்கள், பல்கலைக்கழகம் சார்ந்தவர்கள், முன்னணி அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள், விளையாட்டுத்துறை சார்ந்தவர்கள், இளைஞர்கள், யுவதியர் என பலதரப்பட்டவர்களும் கலந்துகொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது.



# கொழும்பு முகத்துவாரத்தில் மாசி மகத் தேர்

கொழும்பு முகத்துவாரம் அருள்மிகு ஸ்ரீபூமிநீளா பத்மாவதி (ஸ்ரீமுத்து மாரி அம்பாள்) சமேத ஸ்ரீவெங்க டேஸ்வர மகாவிஷ்ணு ஆலய மாசி மக மஹோற்சவத் தேர்த்திருவிழா நேற்று வியாழக்கிழமை காலை ஆலய அறங் காவலர் துரைசாமி செட்டியார் தலை மையில் நடைபெற்றது.

சிவஸ்ரீ சு. வைத்திலிங்கம் பட்டர் ராஜா குருக்கள் அம்பாளுக்கு அலங் கார தீபாராதனை மற்றும் கோ பூஜை நடத்தி வைக்கின்றஜயையும் இரத்தில் அம்பாள் பக்தர்கள் சகிதம் புறப்பட்டு செல்வதையும் காணலாம்.









# வன்னியில் ஏறக்குறைய 370,000 கால்நடைகளுக்கு மேய்ச்சல் தரவை இன்மையால் வளர்ப்பாளர்கள் அவதி

## ரவிகரன் எம்.பி. நாடாளுமன்றில் சுட்டிக்காட்டு

(விஜயரத்தினம் சரவணன்)

வன்னியில் ஏறக்குறைய 370,000 கால்நடைகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றுக்கான மேய்ச்சல் தரவையின்மையால், கால்நடை வளர்ப்பாளர்கள் அவதியுறுகின்றனர் என வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நாடாளுமன்றில் சுட்டிக்காட்டியுள்ளார்.

எனவே மேய்ச்சல் தரவைக்காக காணிகளை ஒதுக்கிக் கொடுத்து இப்பிரச்சினைக்கு தீர்வுகாணுமாறும் அவர் இதன்போது வேண்டுகோள் ஒன்றையும் முன்வைத்தார்.

நாடாளுமன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்ற 2025ஆம் ஆண்டிற்கான வரவு - செலவுத்திட்ட கமத்தொழில், கால்நடை வளங்கள், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் பங்கேற்று கருத்துத் தெரிவிக்கும்போதே அவர்



மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் -

குறிப்பாக முல்லைத்தீவு மாவட்டத்தில் 100,000 கால்நடைகளும், மன்னார் மாவட்டத்தில் 140,000 கால்நடைகளும், வவுனியா மாவட்டத்தில் 130,000 கால்நடைகளுமாக, வன்னிப் பகுதியில் மொத்தமாக ஏறக்குறைய 370,000 கால்நடைகள் காணப்படுகின்றன.

இவ்வாறு பெருமளவான கால்நடைகள் காணப்படுகின்றபோதும் கால்நடைகளுக்குரிய மேய்ச்சல் தரவை இல்லாத சிக்கலான நிலைமை காணப்படுகின்றது.

இதனால் கால் நடைகளை வீதிகளின் இருமருங்கிலும் மேயவிட வேண்டிய நிலை காணப்படுவதாக கால்நடைவளர்ப்பாளர்கள் தெரிவிக்கின்றனர். மேய்ச்சல் தரவையின்மையால் கால்நடை வளர்ப்பாளர்கள் பெருத்த சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே இந்த சிக்கல் நிலமைகளைக் கருத்தில்கொண்டு கால்நடைகளுக்குரிய மேய்ச்சல்தரவை நிலங்களை ஒதுக்கிக்கொடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன் - என்றார்.

# மட்டக்களப்பு செங்கலடியில் வீட்டுக் காணியில் புதையுண்ட நிலையில் மோட்டர் குண்டு மீட்பு!



(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு செங்கலடிப் பிரதேசத்திலுள்ள வீடு ஒன்றின் காணியில் நிலத்தில் புதையுண்டிருந்த நிலையில் மோட்டார் குண்டு ஒன்று நேற்று முன்தினம் புதன்கிழமை மீட்கப்பட்டுள்ளதாக ஏறாவூர் பொலிஸெ தெரிவித்தனர்.

அந்தப் பிரதேசத்திலுள்ள முதலியார் நீதிமன்ற வீதியிலுள்ள - வெளிநாட்டில் வசித்து வரும் - ஒருவரின் காணி ஒன்றைப் பராமரித்துவரும் ஒருவர் காணியைத் துப்பரவு செய்யும் போது நிலத்தில் புதைக்கப்பட்டிருந்த மோட்டார் குண்டு ஒன்றைக் கண்டு பொலிஸாருக்கு அறிவித்தார்.

இதனைத் தொடர்ந்து சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் குண்டைச் செயலழிக்க வைப்பதற்கான உத்தரவை நீதிமன்றிடம் பெறுவதற்கான நடவடிக்கை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக ஏறாவூர் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# ‘மாற்குவின் கலை அம்பலம்’ காண்பியக் காட்சி மன்னாரில்

(மன்னார் நிருபர்
எஸ்.ஆர்.லெம்பேட்)

இலங்கைத் தமிழர் மத்தியில் நவீன ஓவியத்தை பிரபலப்படுத்திய அ.மாற்கு அவர்களின் கலைப்படைப்புகளை ஒன்று திரட்டி மக்கள் மத்தியில் கொண்டு சேர்க்கும் காண்பியக் காட்சி நேற்று வியாழக்கிழமைமன்னாரில் ஆரம்பமாகி உள்ளது.

மன்னார் வயல் வீதி, சின்னக்கடை என்ற இடத்தில் நாளை மறுதினம் 16 ஆம் திகதி மாலை 5 மணி வரை இந்தக் கண்காட்சி இடம்பெறும்.

மாற்கு அவர்களின் மாணவர்கள் மற்றும் குடும்பத்தார் இணைந்து இந்தக் காண்பியக் காட்சியை ஏற்பாடு செய்துள்ளனர். மாற்கு அவர்களால் உருவாக்கப்பட்ட நூற்றுக்கு அதிகமான கலைப்படைப்புக்கள் மக்கள் பார்வைக்காக காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

கண்காட்சி யை அனைவரும் வருகை தந்து பார்வையிடுமாறு ஏற்பாட்டுக் குழுவினர் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அ. மாற்கு 1933ஆம் ஆண்டு குருநகரில் பிறந்தார். புனித சம்பத்திரிசியார் கல்லூரியில் கல்வி கற்றார். சிறு வயதிலேயே ஓவியம் வரைவதில் சிற்பங்கள் செய்வதிலும் விருப்பம் கொண்டிருந்தார்.

தனது ஆரம்ப ஓவியப் பயிற்சியை ஓவியர் எஸ். பெனடிக்ற் அவர்களிடம் பெற்றுக்கொண்டார். பின்னர் 1953 இல் கொழும்பு நுண்கலைக் கல்லூரியில் இணைந்து ஐந்து வருடங்கள் பயின்று பட்டம் பெற்றார். அங்கு அவரின் விரிவுரையாளராக இருந்த டேவிற் பெயின்ரர் இவரின் ஓவியங்களை பாராட்டியும் ஊக்கப்படுத்தியும் வந்தார்.

இவர் 1958-1967 வரையான காலப்பகுதியில் யாழ்ப்பாணத்தில் ஓவியர் எம்.எஸ் கந்தையாவினால் உருவாக்கப்பட்ட “விடுமுறைக்கால ஓவியக் கழகத்தில்” (Holiday Painter's Group) இணைந்து இளையவர்களுக்கு ஓவியத்தை கற்றுக் கொடுத்துள்ளார்.

ஆரம்பத்தில் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் பின்னர் கொக்குவில் இந்து கல்லூரியிலும் ஓவிய ஆசிரியராக பணியாற்றினார்.

அத்துடன், 1960 களின் இறுதியில் இயங்காது போன ”விடுமுறை ஓவியக் கழகத்தை” 1980 களின் மத்தியில் வீட்டில் உருவாக்கி இருந்த ஓவியக் கூடத்தில் ஆரம்பித்து, இடம்பெயர்ந்து வன்னியிலும் மன்னாரிலும் வாழ்ந்த காலங்களிலும் தொடர்ந்து நூற்றுக் கணக்கானவர்களுக்கு ஆசானாக திகழ்ந்தார்.

இவர்களில் பலர் இன்றும் உலகின் பல பாகங்களிலும் ஓவியர்களாக வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள்.

1998இல் மன்னாருக்கு குடும்பத்துடன் இடம் பெயர்ந்தனர்.

உடல்நலக் குறைபாடு ஏற்பட்டதன் காரணமாக கை,கால்களில் செயலிழப்பு ஏற்பட்டிருந்தது. கைகளுக்கு கொடுக்கப்பட்ட உடல் பயிற்சிகளின் மூலம் மீண்டும் கைகள் பலம் பெற, மீண்டும் ஓவியங்கள் படைக்க தொடங்கினார்.

போர் நடைபெற்றுக் கொண்டிருந்ததால் தொடர்புகளற்ற நிலையில், யாழ்ப்பாணத்தில் தனது வீட்டில் இருந்த ஓவியங்கள் அனைத்தும் போரால் அழிந்திருக்கும் என்ற நினைப்பில் பழைய ஆக்கங்கள் பலவற்றை மீளவும் உருவாக்கினார்.

இறுதி வரை எப்போதும் போல் பத்திரிகை தாள்கள், சஞ்சிகைகள், பொருட்கள் வரும் மட்டைகள் என்பவற்றில் எண்ணெய் சுண்ணம், கரித்துண்டு, பேனைகள் எனக் கிடைப்பவற்றைக் கொண்டு ஓவியங்களை படைத்துக் கொண்டே இருந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.















# தையிட்டி விகாரைக்கு எதிராக நேற்றும் மக்கள் போராட்டம்!

சட்டவிரோதமான முறையில் தனியார் காணியில் அமைக்கப்பட்ட தையிட்டி விகாரைக்கு எதிர்ப்பு தெரிவித்து பௌர்ணமி தினமான நேற்று அங்கு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன் பொழுது “சட்டவிரோத விகாரையை இடித்தழி!”, “இராணுவமே வெளியேறு!“ , “நீதி வேண்டும், நீதி வேண்டும்!“ ஆகிய கோஷங்களை எழுப்பிய வண்ணம் மக்கள்போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இப் போராட்டம் இடம்பெற்ற பகுதியில் போராட்டகாரர்களை அச்சுறுத்தும் வகையில் கனரக வாகனங்கள் மிக வேகமாக பயணித்தன எனவும் பொலிஸாரும் அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டனர் எனவும் போராட்டகாரர்கள் தெரிவித்தனர்.



காணிகளின் உரிமையாளர்கள், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் செயலாளர் செல்வராசா கஜேந்திரன், சட்டதரணிகளான காண்டீபன், சுகாஷ் தமிழ் தேசிய பசுமை இயக்கத்தின் தலைவர் பொ.ஐங்கரநேசன் உட்பட பல்வேறு கட்சியின் உறுப்பினர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து கொண்டிருந்தனர்.





# வாரியபொல கலகெதரவில் லொறி கவிழ்ந்து விபத்து!





**(உடப்பு க.மகாதேவன்)**

குருநாகல் – புத்தளம் வீதியில் வாரியபொல கலகெதர பிரதேசத்தில் நேற்று வியாழக்கிழமை பகல் லொறி ஒரு பக்கமாக குடை சாய்ந்து விபத்துக்குள்ளானதில் சாரதி உட்பட அதில் செய்தவர்கள் காயமடைந்தனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

லொறியின் சில்லு குடை சாய்ந்ததில்இந்தவிபத்துஏற்பட்டுள்ளது.மேலதிக விசாரணைகளை வாரியபொல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பனை அபிவிருத்திச் சபையின் கடந்த கால ஊழல்கள்; சபைத் தலைவர் சகாதேவன் வாக்குமூலம் வழங்கினார்

**(த.சுபேசன்)**

பனை அபிவிருத்திச் சபையின் கடந்த கால ஊழல், மோசடிகள் தொடர்பாக நாடாளுமன்ற கோப் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டினை அடிப்படையாகக் கொண்டு நேற்று வியாழக்கிழமை பனை அபிவிருத்திச்சபையினுடைய தற்போதைய தலைவர் வி.சகாதேவனிடம் கொழும்பு குற்றப்புலனாய்வுப் பணியகத்தினர் இரண்டு மணி நேரம் வாக்குமூலம் பெற்றுள்ளனர்.

இது தொடர்பாக பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் வி.சகாதேவன் கருத்துத் தெரிவிக்கையில்,

கடந்த காலங்களில் பனை அபிவிருத்திச்சபையில் இடம்பெற்ற பல்வேறு ஊழல், மோசடிச் சம்பவங்கள், சபையின் ஆவணங்கள் மறைக்கப்பட்ட மற்றும் எரித்து அழிக்கப்பட்ட சம்பவங்கள் தொடர்பாக சபையின் தற்போதைய தலைவர் என்ற அடிப்படையில் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பணியகத்திற்கு என்னை அழைத்திருந்த நிலையில் என்னிடம் இரண்டு மணி நேரத்திற்கு மேலாக அவ்விடயங்கள் தொடர்பாக வாக்குமூலம் பெற்றுள்ளனர்.




கடந்த காலத்தில் பனை அபிவிருத்திச்சபையில் இடம்பெற்ற பல்வேறு குற்றச்சாட்டுகள் தொடர்பாக நாடாளுமன்ற கோப் குழுவிற்கு கிடைக்கப்பெற்ற அறிக்கையின் அடிப்படையிலேயே கொழும்பு குற்றப்புலனாய்வுப் பணியகம் விசாரணைகளை ஆரம்பித்திருக்கின்றது.

யாழ்ப்பாணத்தில் சமாசங்கள் மற்றும் கொத்தணிகளுக்குச் சொந்தமான இரு வடிசாலைகள் கடந்த காலத்தில் தனியாருக்கு தாரை வார்க்கப்பட்டிருந்தன.

அதனை மீட்டுத் தருமாறு பொது மக்கள் போராடி வரும் நிலையில் இவ் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

திக்கம் வடிசாலையை இயக்க விடாமல் சில சக்திகள் தடுத்து வரும் நிலையில் புதிய அரசாங்கத்தின் ஊழலுக்கு எதிரான செயற்திட்டத்தின் ஓர் அங்கமாக பனை அபிவிருத்திச் சபையின் கடந்த கால ஊழல்கள் தொடர்பாக விசாரணை நிச்சயமாக ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தும்.

மறைக்கப்பட்ட பல உண்மைகள் வெளிவரும் என எதிர்பார்க்கப்படுகின்றது. – என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# இனப்பரம்பலை மாற்றும் குடியேற்றங்களை மகாவலித் திட்டத்தின் பெயரால் செய்யாதீர்!

## நாடாளுமன்றத்தில் சத்தியலிங்கம் எம்.பி. வலியுறுத்து



மகாவலித் திட்டம் என்ற போர்வையில் இனப்பரம்பலை மாற்றும் குடியேற்றங்களை செய்யவேண்டாம் என்று தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் மருத்துவர் ப.சத்தியலிங்கம் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற விவசாய, காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மகாவலித் திட்டம் அரசியலுக்காகப் பயன்படுத்தப்பட்ட திட்டம் என்று பிரதி அமைச்சர் அவர்களே குறிப்பிட்டுள்ளார். அதுவே உண்மையாகும். கடந்த காலங்களில் மகாவலித்திட்டத்தினூடாக எமது பிரதேசங்களின் இனப்பரம்பலை மாற்றுவதற்காக திட்டமிட்ட குடியேற்றங்கள் செய்யப்பட்டன. இதனை இந்த அரசாங்கமும் தொடரக்கூடாது என்று கேட்டுக்கொள்கின்றேன்.

நாட்டின் ஒவ்வொரு அங்குலக் காணியும் உற்பத்திப்பொருளாதாரத்திற்காக பயன்படுத்தப்படல் வேண்டும் என்று பிரதி அமைச்சர் தனது உரையில் குறிப்பிட்டார். அதனை நாங்களும் ஏற்றுக்கொள்கின்றோம். ஆனால் வன்னி பிரதேசத்தில் இடம்பெயர்விற்கு பின்னர் மக்கள் மீளக்குடியேறிய போது அவர்களால் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்ட வயற்காணிகள் அரச திணைக்களங்களால் கையகப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் அந்தக் காணிகள் மக்களால் பயன்படுத்தப்பட முடியாதுள்ளது. எனவே இந்தக்காணிகள் மக்கள் விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக மீளக் கையளிக்கப்படல் வேண்டும்.

இதேபோன்று பயிர்ச்செய்கைக்காக பயன்படுத்தப்பட்ட சிறிய குளங்களும் எல்லைக் கற்கள் போடப்பட்டுள்ளமையால் பயன்படுத்தமுடியாதுள்ளன. 30 ஆண்டுகளாக திருத்தப்படாதுள்ள பல முறிப்புக்குளங்கள் எமது பிரதேசத்தில் காணப்படுகின்றன. அவற்றைப் புனரமைத்து நாட்டின் தேசிய உற்பத்தியை கூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

மகாவலி 'எல்' எல் வலயம் அரசியலுக்காக பயன்படுத்தப்பட்ட ஒரு திட்டமாகும். மகாவலியின் ஒரு துளி நீர்கூட இதுவரை எமது மாகாணத்திற்கு வரவில்லை. ஆனால் மகாவலி திட்டம் என்ற போர்வையில் வேறுபிரதேசங்களிலிருந்து மக்களை கொண்டு வந்து குடியேற்றி எமது பிரதேசத்தின் இனப்பரம்பலை மாற்றுவதற்கு கடந்த காலங்களில் அரசாங்கங்கள் செயற்பட்டன. அதனை இந்த அரசும் தொடரக்கூடாது.

இதேபோன்று கீழ்மல்வத்து ஓயா திட்டம் எமது மாவட்டங்களுக்கு பயனுள்ளது. எனினும் இந்த திட்டத்தால் அநுராதபுர மாவட்டத்தில் இருந்து இடம்பெயரவுள்ள மக்களை வவுனியா மாவட்டத்தில் குடியேற்றுவதற்கான முன்ஆயத்தநடவடிக்கைகள்முன்னைய அரசாங்கத்தால் செய்யப்பட்டிருந்தது. எனவே இனமுரண்பாட்டை ஏற்படுத்தக்கூடிய இந்த மாதிரியான நடவடிக்கைகளை இந்த அராங்கம் செய்யக்கூடாதென்று கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும் தென்னைச்செய்கையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ள வெண்ஈ தாக்கத்தை கட்டுப்படுத்த போதுமான நடவடிக்கைகள் செய்யப்படவில்லை. சிறுதோட்ட விவசாயிகளால் இதற்கான மருந்து தெளிப்பான்களை விலைக்கு வாங்கிப் பயன்படுத்த முடியாதுள்ளது. எனவே மருந்து தெளிக்கும் இயந்திரங்களை கமநல கேந்திர நிலையங்களுக்கு வழங்கினால் விவசாயிகள் இதனை வாடகை அடிப்படையில் பயன்படுத்தமுடியும்.

தற்போது உரமானியத்தொகை ஏக்கருக்கு ரூபா 10 ஆயிரமே வழங்கப்படுகின்றது. இந்த தொகை போதாது என்று விவசாயிகள் தெரிவிக்கின்றனர். எனவே ஏக்கருக்கு ரூபா 20 ஆயிரம் ஆக உயர்த்த நடவடிக்கை எடுக்கவேண்டும். அத்துடன் காசாக கொடுக்காமல் உரமாக கொடுப்பதை விவசாயிகள் விரும்புகின்றார்கள். இதனால் தரமான உரத்தினை பெற்றுக்கொள்ளமுடியும்.

வன்னி மாவட்டங்களில் கடந்த காலத்தில் ஏற்பட்ட கடும் மழையினால் அழிவடைந்த உழுந்து செய்கைக்கு இதுவரை நஷ்ட ஈடு வழங்கப்படவில்லை. எனவே அதற்கான நஸ்ட ஈட்டினை வழங்க ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். - எனவும் தெரிவித்தார்.

# புதுக்குடியிருப்பில் வீடுடைத்து தங்க நகைகள் திருடிய இளைஞன் மட்டக்களப்பு ஏறாவூரில் வைத்துக் கைது!

(பா.சதீசன்)

புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் பட்டப்பகலில் வீடு உடைத்து திருடிய குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் நேற்று மன்தினம் கைது செய்யப்பட்டுள்ளார்.

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு இரணைப்பாலை பகுதியில் ஆசிரியர் ஒருவரின் வீட்டினை உடைத்து 6 லட்சத்து பத்தாயிரம் ரூபா பெறுமதியான தங்கநகைகள் திருடப்பட்ட சம்பவம் ஒன்று கடந்த 25 ஆம் திகதியன்று இடம்பெற்றிருந்தது. அதனையடுத்து அந்தச் சம்பவம் தொடர்பாக




புதுக்குடியிருப்பு பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டதனையடுத்தே நேற்று முன்தினம் இந்தத் திருட்டுடன் தொடர்புடைய சந்தேகநபர் ஏறாவூர், மட்டக்களப்பில் வைத்து புதுக்குடியிருப்பு பொலிஸ் நிலைய குற்றத்தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி அஜித் தலைமையில், பொலிஸ் கான்ஸ்டபிள்களான குமார, கவிராஜ், அர்ஜன் ஆகியோரைக் கொண்ட பொலிஸ் குழுவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞர் ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு எதிர்வரும் 25.03.2025 வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

# இன்றைய ராசி பலன்கள் - 14.03.2025




சில செயல்களில் தாமதங்கள் காணப் படும். பதற்றத்தைக் கட்டுப்படுத்த வேண்டும். ஆன்மீக ஈடுபாடு உங்களை அமைதிப் படுத்தும்.

உங்கள் முக்கியமான பணிகளை முடிக்க இயலாது. தாமதங்கள் ஏற்படும். குறித்த நேரத்தில் பணிகளை முடிக்கத் திட்டமிட வேண்டியது அவசியம்.

இன்று நீங்கள் உங்கள் துணையை திருப்திபடுத்த இயலாது. உங்களால் முடிந்த அளவு இனிமையாகப் பேசி நிலைமையை சீராக்குங்கள்.

இன்று அதிர்ஷ்டம் குறைவான நாள். பணப்புழக்கம் காணப்பட்டாலும் தேவையற்ற செலவுகள் காணப்படும்.

இன்று ஆரோக்கியம் சிறப்புடன் காணப்படாது. தூக்க மின்மை காரணமாக இன்று ஆரோக்கியம் குன்றி காணப்படும். முடிந்தால் நன்கு உறங்க முயற்சி செய்யுங்கள்.




இன்று உங்களுக்கு மிகவும் அமைதி யான நாளாக அமையும்.சௌகரிய மான நாளாக அமையும்.திருப்தியுடன் காணப்படுவீர்கள்.நீங்கள் பெரிதாக எதையோ சாதித்தது போன்று உணர்வீர் கள்.

நீங்கள் உங்கள் பணியில் இன்று இரகசியத்தை காப் பீர்கள்.நீங்கள் பணியாற்றும் முறை உங்கள் மேலதி காரிகளின் பாராட்டைப் பெறும்.

இன்று உங்கள் துணையுடன் இருப்பதை சொர்கத்தில் இருப்பது போல உணர்வீர்கள். இன்று மிகவும் மகிழ்ச்சி யுடன் காணப்படுவீர்கள்.

இன்று சேமிக்கும் பழக்கத்தை உருவாக்கிக் கொள்வீர் கள். அது உங்களுக்கு திருப்தியை அளிக்கும். இன்று சுதந்திரமான நிதிநிலைமைக்கு வாய்ப்பு உள்ளது.




இன்று மகிழ்ச்சியாக இருப்பதற்கு உற்சாகமானதாக எதுவும் காணப்படாது. நீங்கள் குழப்பத்துடன் காணப்படுவீர்கள். நீங்கள் எடுத்த முடிவு தவறாக முடியும்.

பணியில் வளர்ச்சி குறைந்து காணப்படும்.பணிச்சுமை அதிகமாக இருக்கும்.பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க திட்டமிட வேண்டியது அவசியம்.

உங்கள் துணையுடன் உறவாடும் போது சில சிக் கல்கள் காணப்படும். இது இன்றைய நாளின் இனி மையை பாதிக்கும்.

இன்று நிதி வளர்ச்சிக்கு உகந்த நாள் அல்ல. உங்களி டம் இருக்கும் ஒவ்வொரு பணத்தையும் சேமிக்க வேண்டும்.

தோல் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் உருவாகலாம். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்கவும்.




இன்று மகிழ்ச்சி குறைந்து காணப்படும். குறைந்து காணப்படும் தன்னம்பிக் கையை அதிகரித்துக் கொள்ளுங்கள். சில புத்திசாலித்தனமான திட்டமிடல் வெற்றி யின் உச்சத்தை அடைய வழிகாட்டும்.

உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிக்க இயலாது. பணிகளை திட்டமிட்டு கவனமுடன் ஆற்றுவதன் மூலம் தவறுகள் நேராமல் பார்த்துக் கொள்ள லாம்.

உறவில் நல்லிணக்கத்தைப் பராமரிக்க உங்கள் துணையுடன் அனுசரித்து நடந்து கொள்ள வேண்டும்.

எதிர்பாராத வகையில் பண இழப்பு ஏற்படலாம். செலவு களை கட்டுபடுத்த வேண்டும். பணத்தைக் கவனமாகக் கையாள வேண்டும்.

உங்கள் தாயாரின் சிறிய உடல் நிலை பிரச்சினை ஒன்றிற்காக பணம் செலவு செய்ய நேரலாம்.




இன்று திருப்தியான பலனை பெறுவ தற்கு உங்கள் மனதை அமைதியாக வைத்திருக்க வேண்டியது அவசியம். உங்கள் தன்னம்பிக்கையை இழக்கா தீர்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாக காணப்படும்.எதிர்பார்ப்புடன் நன்மை தீமைகளை ஆலோசித்து அதன்படி பணியாற்றுவது நல்லது.

உங்கள் துணையைப் புரிந்து கொண்டு அவரின் விருப்பங்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

பயணத்தின் போது பண இழப்புகள் நேரலாம். பணத்தை கையாள்வதில் கவனம் தேவை.

இன்று பதற்றத்துடன் காணப்படுவீர்கள். அதனால் தோள்களில் வலிகள் ஏற்படலாம். ஆரோக்கியத்தில் கவனம் செலுத்தவும்.




இன்றைய நாள் உங்களுக்கு சாதக மாக இருக்கும்.இன்று கூடுதல் பலன் கள்கிடைக்கும். முக்கியமான முடிவுகள் எடுப்பதற்கு இன்று திட்டமிடலாம்.

நீங்கள் ஆற்றும் பணியில் வளர்ச்சியைக் காண்பீர்கள். உங்கள் மேலதிகாரிகளின் பாராட்டைப் பெறுவீர்கள். கடமை உணரச்சி மற்றும் சேவை மனப்பான்மையுடன் பணி யாற்றுவீர்கள்.

உங்கள் இல்லத்தில் நடைபெறவிருக்கும் ஒரு விழா குறித்து உங்கள் துணையுடன் இணைந்து திட்டமிடுவீர் கள். இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று அதிக அளவில் பணம் காணப்படும். அதனை பயனுள்ள வகையில் செலவு செய்வீர்கள்.

இன்று ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




இன்று மகிழ்ச்சியுடன் காணப்படுவீர் கள்.இது உங்கள் செயலிலும் எண்ணத் திலும் வெளிப்படும்.தியானம் மேற் கொள்வதன் மூலம் நீங்கள் மகிழ்ச்சியாக இருக்கலாம்.

புதிய வேலைவாய்ப்புக்கான சாத்தி யம் உள்ளது.இது உங்களுக்கு மகிழ்ச்சியை அளிக்கும். பணி செய்வதற்கான சாதகமான நிலை காணப்படும்.

உங்கள் துணையிடம் நேர்மையாக உங்கள் உணர்வுக ளைப் பகிர்ந்து கொள்வீர்கள். இதனால் நல்ல புரிந் துணர்வு ஏற்படும்.

இன்று பண வளர்ச்சி அதிகமாக காணப்படும். சேமிப்பு திட்டங்களில் சேர்வதன் மூலம் நீங்கள் உங்கள் பணத் தேவைகளை மேம்படுத்தலாம்.

உங்கள் ஆரோக்கியம் சிறந்து காணப்படும்.




உங்கள் எதிர்மறை எண்ணத்தை வெளிப்படுத்துவீர்கள்.அதனை தவிர்ப் பது நல்லது. இல்லையெனில் முன்னேற் றம் காண்பது அரிது.யதார்த்தமான அணுகுமுறை தேவை.

உங்கள் பணியில் தவறுகள் நேர லாம். இதற்கு உங்களின் கவனக் குறைவே காரணமாக இருக்கும். இதை நீங்கள் தவிர்ப்பது நல்லது. திறமையான முறையில் ஒழுங்கமைத்து பணியாற்றினால் வெற்றி கிடைக்கும்.

உங்கள் துணையிடம் அன்பைக் கொடுத்து அன்பைப் பெறுதல் என்ற கருத்துடன் இன்று பழகுவது நல்லது. இதனால் மகிழ்ச்சி நிலவும்.

உங்கள் பொறுப்புகள் அதிகரித்து காணப்படும். இன்று இதனை தவிர்க்க முடியாது.

# இன்றைய ராசி பலன்கள் - 14.03.2025




உங்கள் மனதை இன்று தியானம் மேற்கொள்வதன் மூலம் ஒய்வாக வைத்துக் கொள்ள முடியும்.நீங்கள் எதையோ இழந்தது போல உணர்வீர்கள். பாதுகாப்பின்மை உணர்வு உங்கள் மனதில் காணப்படும். விஷயங்களை எளிதாக எடுத்துக் கொள்ளுங்கள்.

இன்று பணிச்சுமை அதிகமாகக் காணப்படும். அதனால் தவறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.உங்கள் பணிகளை ஒழுங்கமைத்து பணியாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் உங்களின் ஈகோ உணர்வை வெளிபடுத்தாதீர்கள். நட்புடன் அணுகுங்கள்.

திடீர் செலவுகள் எதிர்கொள்ள நேரலாம். சேமிப்புக்கென்று சிறிது பணத்தை ஒதுக்குவதற்கு முயற்சி செய்வது நல்லது.




இன்று நீங்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள்.உங்கள் நலனை மேம்படுத்தும் பயனுள்ள முடிவுகளுக்கான திட்டங்களை மேற்கொள்வீர்கள். எந்தச் செயலாக இருந்தாலும் அதை எளிதில் செய்து முடிப்பீர்கள்.

பிறர் பார்த்து பின்பற்ற முடியாத பாணியில் பணியாற்றுவீர்கள். உங்களின் இந்த தனிப்பட்ட அணுகுமுறை உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெற்றுத் தரும்.

உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்வீர்கள். நீங்கள் ஒருவருக்காக மற்றவர் என்பது போல ஒருமித்த உணர்வுடன் காணப்படுவீர்கள்.

இன்று சுதந்திரமான நிதிநிலைமையுடன் காணப்படுவீர்கள். புதிய முதலீடுகள் செய்வதற்கு இது உகந்த நாள்.

இன்று சகஜமாகவும் துடிப்புடனும் காணப்படுவீர்கள். உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.




இன்று மிகுந்த ஆற்றல் காணப்படும். வெற்றி பெற வேண்டும் என்ற உறுதி உங்களிடம் இருந்தால் இன்றை நாள் உங்களுக்கானது. சுய திட்டமிடல் மற்றும் புத்திசாலித்தனம் மூலம் உங்கள் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ளலாம்.

பணிநிமித்தமான பயணங்களுக்கு வாய்ப்பு உள்ளது. வெற்றி பெறுவதற்கு கடின உழைப்பு தேவை.

நீங்கள் இருவரும் தகுந்த பொருத்தமுடையவர்கள். உங்கள் துணையிடம் நேர்மையுடன் நடந்து கொள்வீர்கள்.

எதிர்பாராத வகையில் பணம் வருவதற்கான வாய்ப்பு உள்ளது. பூர்வீகச் சொத்து கிடைப்பதற்கான வாய்ப்பு உள்ளது.




நீங்கள் விருந்துகள் மற்றும் ஆன்மீகச் சொற்பொழிவுகளில் கலந்து கொண்டு இன்றைய நாளை பயனுள்ளதாக ஆக்குவீர்கள். நீங்கள் மனதுக்கு ஆறுதல் அளிக்கும் பிரார்த்தனையில் ஈடுபடுவீரககள்.

பணியில் பதற்றம் காணப்படும். பணியிடத்தில் காணப்படும் சூழ்நிலையை அனுசரித்து நீங்கள் செயல்பட வேண்டும். அதற்கேற்றால் போல பணிகளை திட்டமிட வேண்டும்.

இன்று நீங்கள் பதற்றத்துடனும் உணர்ச்சி வசப்பட்டும் காணப்படுவீர்கள். இதனை தவிர்த்து உங்கள் துணையிடம் அன்பாக நடந்து கொள்ள வேண்டும்.

பண இழப்புக்கான வாய்ப்புகள் உள்ளது. இன்று பயனுள்ள வகையில் பணத்தை செலவு செய்ய வேண்டியது அவசியம்.

# கருங்குரங்கு, குரங்கு, மரஅணில், மயில் நாட்டில் நாளை காலை கணக்கெடுப்பு!

## படிவங்கள் கிராம அலுவலர்களால் விநியோகம்



(கி.வசந்தன்)

நாளை மார்ச் 15 ஆம் திகதி காலை 8.00 மணி முதல் காலை 8.05 மணி வரை நாடு முழுவதும் நடைபெறவுள்ள வனவிலங்கு கணக்கெடுப்பை மேற்கொள்வதற்கான படிவங்கள் வவுனியா மாவட்டத்தில் கிராம அலுவலர் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் செயற்பாட்டை மிகவும் துல்லியமாகவும், திறமையாகவும் நடத்தும் நோக்கில் கமத்தொழில் அமைச்சின் வளாகத்தில் ஒரு செயல்பாட்டு அறை நிறுவப்பட்டுள்ளது.

கால்நடை கணக்கெடுப்பின் போது ஏற்படக்கூடிய ஏதேனும் சிக்கல்கள் குறித்து விசாரிக்க இந்த செயல்பாட்டு அறை நாளை 15 ஆம் திகதி வரை செயல்படும் என்று கமத்தொழில், கால்நடை வளங்கல், காணி மற்றும் நீர்ப்பாசன அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி, ஏதேனும் சிக்கல் இருப்பின், செயல்பாட்டு அறையின் தொலைபேசி எண்ணான 011-2034336 ஐ அழைத்து விசாரணைகளை மேற்கொள்ளலாம் என்று அமைச்சு வலியுறுத்தியுள்ளது.

அதற்கமைவாக பயிர்களுக்கு சேதம் விளைவிக்கும் வன விலங்குகளின் எண்ணிக்கையைக் குறிப்பதற்காக அரசாங்கத்தால் அச்சிடப்பட்ட படிவங்கள் கிராம அலுவலர் ஊடாக விநியோகிக்கப்பட்டு வருகின்றன. அதில் கருங்குரங்கு, குரங்கு, மரஅணில், மயில் என்பவற்றினுடைய பெயர்கள குறிப்பிட்டு கணெக்கெடுப்பதற்கான வகையில் படிவம் உருவாக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.